வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—நாராயணசாமி

தேதி 21.5.2024 நேரம் மாலை 6.10 மணி

---------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

49 தொகுதிகளில் நேற்று நடைபெற்ற ஐந்தாம் கட்ட மக்களவைத் தேர்தலில், 60.09 சதவிகித வாக்குகள் பதிவாகி இருப்பதாக, தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

வாரிசுக் கட்சியான காங்கிரஸ், ஒரு குடும்பத்தின் நலன்களுக்கு மட்டுமே முக்கியத் துவம் அளிப்பதாக, பிரதமரும், மூத்த பிஜேபி தலைவருமான திரு நரேந்திர மோடி குற்றம் சாட்டி உள்ளார்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி நினைவு நாளான இன்று, புதுச்சேரியில், துணை நிலை ஆளுநர், முதலமைச்சர் உள்ளிட்டோர் அரசு சார்பில் அன்னாரின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

தென்மேற்கு வங்க கடலில் நாளை காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாக கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஐந்தாம் கட்டம்

6 மாநிலங்கள் மற்றும் 2 யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த 49 தொகுதிகளில் நேற்று நடைபெற்ற ஐந்தாம் கட்ட மக்களவைத் தேர்தலில்,

மொத்தம் 60.09 சதவிகித வாக்குகள் பதிவாகி உள்ளன. ஜம்மு-காஷ்மீரின் பாரமுல்லாத் தொகுதியில், கடந்த 35 ஆண்டுகளின் உயரளவாக, 56.73 சதவிகித வாக்குகள் பதிவாகி இருப்பதாகவும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. நேற்றைய ஐந்தாம் கட்ட மக்களவை தேர்தலில் பீகாரில், 54.85 சதவிகித வாக்குகளும், ஜார்கண்டில் 63.07 சதவிகித வாக்குகளும் பதிவாகி உள்ளன. லடாக்கில் வாக்குப் பதிவு 69.62 சதவிகிதமாகவும், மகாராவில் 54.29, ஒடிசாவில் 67.59, உத்தரபிரதேசத்தில் 57.79, மற்றும், மேற்குவங்கத்தில் 74.65 சதவிகிதமாகவும் இருந்தது. இந்த ஐந்தாம் கட்டத்தையும் சேர்த்து இதுவரை 25 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த 428 மக்களவைத் தொகுதிகளில், தேர்தல் முடிவடைந்துள்ளது. அருணாச்சல பிரதேசம், சிக்கிம் மற்றும் ஆந்திரப் பிரதேசத்தில் சட்டமன்ற தேர்தல் முடிந்து விட்ட நிலையில், ஒடிசா சட்டமன்ற தேர்தலில் இதுவரை 63 தொகுதிகளில் வாக்குப் பதிவு பூர்த்தியாகி உள்ளது.

*மோடி-நன்றி*

நேற்றைய ஐந்தாம் கட்ட மக்களவைத் தேர்தலில் வாக்களித்த மக்கள் அனைவருக்கும் பிரதமர் திரு நரேந்திர மோடி நன்றி தெரிவித்துக் கொண்டுள்ளார். இதுகுறித்து சமூக ஊடகத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், தேசிய ஜனநாயக கூட்டணிக்கான ஆதரவு அலை, மேலும்,

மேலும் வலுவடைந்து வருவதாகவும், மத்தியில் தேசிய ஜனநாயக கூட்டணியை மீண்டும் தேர்ந்தெடுக்க மக்கள் தீர்மானித்து விட்டதாகவும் கூறி உள்ளார். எதிர்கட்சிகளின் இண்டியா கூட்டணியை மக்கள் புறக்கணித்து விட்டதாகவும், எதிர்கட்சிகளின் எந்தவிதமான ஓட்டு வங்கி அரசியலும், இனி எடுபடாது என்றும் அவர் தெரிவித்துள்ளார். ஜம்மு-காஷ்மீரில் கடந்த 35 ஆண்டுகளில் இல்லாத அளவில் அதிகமாக வாக்களித்துள்ள பாராமுல்லா தொகுதி மக்களுக்கும், திரு நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துக் கொண்டுள்ளார்.

*ராஜீவ் காந்தி-டெல்லி*

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி நினைவு நாள் இன்று அனுசரிக்கப்படுவதை ஒட்டி, பிரதமர் திரு. நரேந்திரமோடி அன்னாருக்கு அஞ்சலி செலுத்தியுள்ளார். புதுடெல்லியில் உள்ள ராஜீவ் காந்தி நினைவிடமான வீர் பூமியில் காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே, காங்கிரஸ் நாடாளுமன்ற குழுவின் தலைவர் திருமதி. சோனியாகாந்தி, கட்சியின் முன்னாள் தலைவர் திரு. ராகுல்காந்தி உள்ளிட்டோர் மலரஞ்சலி செலுத்தினர்.

மோடி

வாரிசுக் கட்சியான காங்கிரஸ், ஒரு குடும்பத்தின் நலன்களுக்கு மட்டுமே முக்கியத் துவம் அளிப்பதாக, பிரதமரும், மூத்த பிஜேபி தலைவருமான திரு நரேந்திர மோடி குற்றம் சாட்டி உள்ளார். இன்று பீகார் மாநிலம் மோத்திஹாரியில், தேர்தல் பிரச்சாரப் பொதுக் கூட்டம் ஒன்றில் உரையாற்றிய அவர், நடப்பு மக்களவை தேர்தலில் ஊழல் வாதிகள் மற்றும் இந்தியா விரோத சக்திகளுக்கு, மக்கள் சரியான பதிலடி கொடுத்து வருவதாகவும், காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி, படு தோல்வி அடையும் என்றும் கூறினார். மகாத்மாகாந்தியின் சத்தியாகிரகம் மற்றும் ஸ்வச்சாகிரக கொள்கைகளை தாம் பின்பற்றி வரும் நிலையில், அண்ணலின் கொள்கைகளை நிறைவேற்ற காங்கிரஸ் தவறிவிட்டதாக திரு நரேந்திர மோடி குற்றம் சாட்டினார். காங்கிரஸ் தலைமையிலான எதிர்க்கட்சிகளின் கூட்டணி, 21-ஆம் நூற்றாண்டு இளைஞர்களின் கனவுகளுடன் ஒத்துப் போக இயலாது என்றும், தேசிய ஜனநாயக கூட்டணி மட்டுமே, இக்கனவுகளை நிறைவேற்ற முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார். அடுத்த 5 ஆண்டுகளில், மத்தியில் உள்ள உறுதியான அரசினால், வளர்ச்சிப் பணிகள், இன்னும் துரிதமாக மேற்கொள்ளப்படும் என்று அவர் தெரிவித்தார். தொடர்ந்து மகாராஜ்கஞ்ச் மக்களவைத் தொகுதியிலும் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார்.

மோடி-வாரணாசி

பிரதமரும் மூத்த பிஜேபி தலைவருமான திரு நரேந்திர மோடி, தேர்தல் பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக இன்று உத்தரபிரதேஷ் மாநிலம் வாரணாசி தொகுதியில், 25 ஆயிரம் பெண்கள் பங்கேற்கும் மாபெரும் மகளிர் சக்திக் கூட்டத்தில் உரையாற்றுகிறார். கல்வி, மருத்துவம், வர்த்தகம், தொழில் முனைவு, சட்டம், விளையாட்டு உள்ளிட்ட பல்வேறு துறைகளைச் சேர்ந்த பெண்களுடன், ஏராளமான இல்லத் தரசிகளும் இதில் பங்கேற்கிறார்கள். பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று வாரணாசியில் தங்கிய பின்னர் நாளை உத்தரப் பிரதேசத்தில் மேலும் 2 இடங்களில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

டெல்லி

பிஜேபி தேசிய தலைவர் திரு ஜேபி நட்டா இன்று, டெல்லி சாந்தினி சவுக் பகுதியில் சாலை பவனி நடத்தி, பாலம் பகுதியில், தேர்தல் பிரச்சாரப் பொதுக் கூட்டத்தில் உரையாற்றுகிறார். மூத்த பிஜேபி தலைவரும் மத்திய அமைச்சருமான திரு ராஜ்நாத் சிங்கும் இன்று மாலை டெல்லியில் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபடுகிறார். டெல்லி முதலமைச்சரும், ஆம் ஆத்மிக் கட்சியின் அமைப்பாளருமான திரு அரவிந்த் கெஜரிவால் வடகிழக்கு டெல்லியிலும், டெல்லி பிரதேச காங்கிரஸ் தலைவர் திரு தேவேந்திர யாதவ், நகரின் பல்வேறு பகுதிகளிலும் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

*ராஜீவ் காந்தி-புதுச்சேரி*

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி நினைவு நாளான இன்று, புதுச்சேரியில், ராஜீவ்காந்தி சதுக்கத்தில் உள்ள அன்னாரின் திருவுருவ சிலைக்கு,துணைநிலைஆளுநர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், முதலமைச்சர் திரு. ரங்கசாமி, பொதுப் பணித் துறை அமைச்சர் திரு லட்சுமி நாராயணன், சட்டப் பேரவைத் துணைத் தலைவர் திரு ராஜவேலு, அரசுக் கொறடா திரு ஏகேடி ஆறுமுகம், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு கேஎஸ்பி ரமேஷ், திரு பாஸ்கர் என்கிற தட்சிணாமூர்த்தி ஆகியோர், அரசு சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். நிகழ்ச்சியின் போது வன்முறை எதிர்ப்பு தின உறுதிமொழியும் ஏற்கப்பட்டது. காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. வைத்திலிங்கம், முன்னாள் முதலமைச்சர் திரு. வி நாராயணசாமி, முன்னாள் அமைச்சர் திரு கந்தசாமி உள்ளிட்டவர்களும், ராஜீவ் ஜோதியுடன் ஊர்வலமாக வந்து அன்னாரின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திய பின்னர், வன்முறை எதிர்ப்பு தின உறுதிமொழி ஏற்றுக் கொண்டனர்.முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி நினைவு நாளை ஒட்டி, புதுச்சேரி ராஜ்நிவாசில் வன்முறை எதிர்ப்பு தின உறுதிமொழி ஏற்றுக் கொள்ளப்பட்டது. துணை நிலை ஆளுநர் திரு சிபி ராதாகிருஷ்ணன் உறுதி மொழியை வாசிக்க, அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் உறுதி மொழி எடுத்துக் கொண்டனர். புதுச்சேரி அரசின் தலைமை செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தலைமை செயலர்

திரு. சரத் சவுகான் ஆங்கிலத்திலும், அரசு செயலர் திருமதி. முத்தம்மா தமிழிலும், அதிகாரிகள் மற்றும் ஊழியர்களுக்கு, வன்முறை எதிர்ப்பு தின உறுதிமொழி செய்து வைத்தனர். புதுச்சேரி அகில இந்திய வானொலி நிலையத்திலும் அதிகாரிகள், மற்றும் ஊழியர்கள் **வன்முறை எதிர்ப்பு தின உறுதிமொழி** எடுத்துக் கொண்டனர்.

*வில்லியனூர் தேர்*

வில்லியனூரில் இன்று நடைபெற்ற திருகாமேஸ்வரர் கோவில் தேர் திருவிழாவில், துணை நிலை ஆளுநர் திரு சி பி ராதாகிருஷ்ணன் கலந்து கொண்டு, தேரோட்டத்தை வடம் பிடித்து தொடக்கி வைத்தார். முதலமைச்சர் திரு ரங்கசாமி, சட்டப் பேரவைத் தலைவர் திரு ஆர் செல்வம், மாநில உள்துறை அமைச்சர் திரு நமச்சிவாயம், வேளாண் அமைச்சர் திரு ஜெயக்குமார், குடிமைப் பொருள் வழங்கு துறை அமைச்சர் திரு சாய் சரவணன் குமார், சட்டமன்ற உறுப்பினர் திரு ஆர் சிவா மற்றும் ஏராளமான பக்திர்கள் தேர் திருவிழாவில் கலந்து கொண்டனர். முன்னதாக தேரடி வந்து சேர்ந்த துணை நிலை ஆளுநரை கோவில் நிர்வாகிகள் வரவேற்றனர். தொடர்ந்து திருக்காமேஸ்வரர் மற்றும் கோகிலாம்பாள் சந்நிதிகளில், துணை நிலை ஆளுநர் வழிபட்டார். துணை நிலை ஆளுநர், முதலமைச்சர், சட்டப் பேரவைத் தலைவர் மற்றும் அமைச்சர்களுக்கு கோவிலில் சிறப்பு மரியாதை செய்யப்பட்டது.

வானிலை

தென்மேற்கு வங்க கடலில் நாளை காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாக கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இது வடகிழக்கு திசையில் நகர்ந்து, வரும் 24-ஆம் தேதி காலை, காற்றழுத்த தாழ்வு மண்டலமாக, மத்திய வங்க கடல் பகுதியில் நிலவக் கூடும் என்றும், அதன் பிறகு தாழ்வு மண்டலம் மேலும் வலுவடைந்து வடகிழக்கு திசையில் நகரக் கூடும் என்றும், எதிர்பார்க்கப்படுகிறது. இதன் காரணமாக வரும் 27-ஆம் தேதி வரை, தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி காரைக்கால் பகுதிகளில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இன்றைய தினம் நீலகிரி, மதுரை, விருதுநகர், நெல்லை, குமரி, திருச்சி, தஞ்சாவூர், நாகை, திருவாரூர், மயிலாடுதுறை, கடலூர் உள்ளிட்ட மாவட்டங்கள் மற்றும் காரைக்கால் பகுதியில் ஓரிரு இடங்களில் கனமழைக்கும். கோவை, திருப்பூர், தேனி, திண்டுக்கல் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் மிக கனமழைக்கும் வாய்ப்பு இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. பலத்த சூறாவளி காற்று வீசக் கூடும் என்பதால் மீனவர்கள் கடலுக்குள் செல்ல வேண்டாம் என்றும் ஏற்கனவே ஆழ்கடலுக்குள் சென்றுள்ள மீனவர்கள், வரும் 23-ஆம் தேதிக்குள் கரை திரும்ப வேண்டும் என்றும் அறிவுறுத்தப் பட்டுள்ளது.

இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில் அதிக பட்சமாக, நாமக்கல் மாவட்டம் புதுசத்திரத்தில் 16 சென்டிமீட்டர் மழை பதிவாகி உள்ளது.

ஐபிஎல்

ஐபிஎல் கிரிக்கெட் பிளே-ஆப் சுற்றில், இன்று இரவு 7.30 மணிக்கு நடைபெற உள்ள அகமதாபாத்தில் முதலாவது குவாலிபயர் போட்டியில் கொல்கத்தா- ஐதராபாத் அணிகள் மோத உள்ளன. அகமதாபாத்தில் நாளை நடைபெற உள்ள, எலிமினேட்டர் போட்டியில் ராஜஸ்தான் அணி, பெங்களூரு அணியுடன் மோத உள்ளது. முதலாவது குவாலிபயர் போட்டியில் வெற்றி பெறும் அணி, நேரடியாக இறுதிப் போட்டிக்கு தகுதி பெறும். முதலாவது குவாலிபயர் போட்டியில் தோல்வி அடையும் அணிக்கும், நாளைய எலிமினேட்டர் போட்டியில் வெற்றி பெறும் அணிக்கும் இடையில், 2-ஆவது குவாலிபயர் போட்டி நடத்தப்பட்டு அதில் வெற்றி பெறும் அணி, இறுதிப் போட்டிக்கான 2-ஆவது அணியாக தகுதி பெறும். இறுதி போட்டி, வரும் ஞாயிற்றுகிழமை நடைபெற உள்ளது.

வேலை வாய்ப்பு

மத்திய தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு அமைச்சகத்தின் கீழ் புதுச்சேரியில் செயல்படும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் தேசிய வாழ்வாதார சேவை மையம், படித்து வேலை கிடைக்காத எஸ்டி-எஸ்சி இளைஞர்களுக்கு, போட்டித் தேர்வு எழுதுவதில் ஓராண்டு பயிற்சி அளிக்க

திட்டமிட்டுள்ளது. பயிற்சி வழங்க தகுதியான நிறுவனங்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம் என்றும், ஒரு மாணவருக்கு பயிற்சி அளிக்க மாதம் ஒன்றுக்கு ஆயிரத்து 200 ரூபாய் என்ற விகிதத்தில், தொழில் சார்ந்த கட்டணங்கள், பயிற்சி நிறுவனத்திற்கு வழங்கப்படும் என்றும், அறிவிக்கப்பட்டுள்ளது. தகுதி வாய்ந்த நிறுவனங்கள் வரும் 30-ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம் என்றும் கூடுதல் விவரங்களுக்கு, labour.gov.in என்ற இணையதளத்தை அணுகலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

49 தொகுதிகளில் நேற்று நடைபெற்ற ஐந்தாம் கட்ட மக்களவைத் தேர்தலில், 60.09 சதவிகித வாக்குகள் பதிவாகி இருப்பதாக, தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

வாரிசுக் கட்சியான காங்கிரஸ், ஒரு குடும்பத்தின் நலன்களுக்கு மட்டுமே முக்கியத் துவம் அளிப்பதாக, பிரதமரும், மூத்த பிஜேபி தலைவருமான திரு நரேந்திர மோடி குற்றம் சாட்டி உள்ளார்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி நினைவு நாளான இன்று, புதுச்சேரியில், துணை நிலை ஆளுநர், முதலமைச்சர் உள்ளிட்டோர் அரசு சார்பில் அன்னாரின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

தென்மேற்கு வங்க கடலில் நாளை காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாக கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

-----------------------------